MR. SPEAKER : What specific rule is the hon. Member refering to?

SRI K. A. MATHIALAGAN : Rule 56 states as follows :—

(1) A Member who has resigned the office of Minister, may, with the consent of the Speaker, make a personal statement in explanation of his resignation.

நம்முடைய மதிப்பிற்குரிய முன்னாள் முதல் அமைச்சர் திரு. காமராஜ் அவர்கள் கடந்த மாதத்தில் ராஜினாமா செய்தார்கள். அந்த விதியின்படி, அவர்கள் அவ்வாறு ராஜினாமா செய்ததை இந்த மன்றத்திற்கு தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

MR. SPEAKER : The hon. Member may please read the rule again.

SRI K. A. MATHIALAGAN : According to the Hon. Chief Minister " may " means " shall ".

MR. SPEAKER : I do not want the hon. Member to refer to anybody's interpretation. What is the hon. Member's view about it?

SRI K. A. MATHIALAGAN : I shall explain, Sir.

MR. SPEAKER : All right. Let the hon. Member explain.

திரு. கே. ஏ. மதியழகன் : இந்த மரபை ஒட்டித்தான் முன்னாள் இருந்த திரு. ராஜகோபாலாச்சாரியார் அவர்கள் அறிக்கை கொடுத்திருக்கிறார்கள். ஒரு கட்சியைச் சார்ந்தவராக இருந்தாலும், முதலமைச்சர் என்ற காரணத்தினாலும், சபையை அவமதிப்பதாகும் என்ற காரணத்தினாலும், **It amounts to contempt of the House and disrespect to the House** என்ற காரணத்தினாலும், **"may"** என்பதற்கு **'shall'** என்ற பொருள் கொண்டு விளக்கம் கொடுத்திருக்க வேண்டுமென்று சொல்லுகிறேன்.

*** கனம் திரு. எம். பக்தவத்சலம் :** 'மே', 'ஷெல்' என்பதெல்லாம் இருக்கட்டும். சில இடங்களில் தான் 'மே' என்பது 'ஷெல்' ஆகும். கண்ணை மூடிக்கொண்டு படிக்கக் கூடாது. இப்பொழுதும் ஒரு கன்வென்ஷன் இருக்கிறது. அமைச்சர்கள் ராஜினாமா செய்தால், வேண்டுமானால் ஸ்டேட்மென்ட் கொடுக்கிறார்கள். அப்படி இல்லை என்றால், ஸ்டேட்மென்ட் கொடுக்காமல் இருக்கிறார்கள். இதிலே பாயிண்ட் ஆப் ஆர்டர் ஒன்றும் இல்லை.

MR. SPEAKER : There is no point of order in this.

III—IADJOURNMENT MOTIONS.

(1) DEATH OF A PERSON IN POLICE CUSTODY AT TIRUMANGALAM.

MR. SPEAKER : The hon. Member Sri M. Kalyanasundaram has given notice of an adjournment motion to discuss a matter of urgent public importance, viz., the death of one Sri Mani, who was beaten to death while in police custody at the police station at Tirumangalam, Madurai district, on 8th August 1963. This

incident is said to have taken place on 8th August 1963. The House was in session from 6th to 17th August 1963. This matter has not been brought before the House then. This matter is already old.

SRI M. KALYANASUNDARAM : On the point of delay, I want to explain.

MR. SPEAKER : All right. The hon. Member may please explain.

திரு. மீ. கலியாணசுந்தரம் : கனம் சபாநாயகர் அவர்களே, தாங்கள் விரும்புவது போல சென்ற சட்டசபை கூட்டத்திலேயே இந்த விஷயத்தை ஏன் கொண்டுவரவில்லை என்பதற்கு காரணம் கூற விரும்புகிறேன். நான் அந்த தேதிகளில் சபைக்கு வர முடியவில்லை. அதையொரு காரணமாக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று நான் சொல்லவில்லை. அப்பொழுதே கொண்டு வந்திருந்தாலும் அரசாங்கம் விசாரணை நடத்தப்போகிறார்கள், அதற்குள் அவசரப்பட்டு கொண்டு வந்து விட்டார்கள் என்று சொல்லக் கூடாது என்பதற்காகத்தான் அப்பொழுது கொண்டு வரவில்லை. இப்பொழுது நான் அவசரப் பிரேரணையாக கொண்டு வந்து இருப்பது அன்று நடந்த சம்பவத்தைப்பற்றி அல்ல. ஆனால் அரசாங்கம் விசாரணை நடத்த தவறிவிட்டது, இதுவரை எந்த ஏற்பாடும் செய்யவில்லை, எந்த உத்தரவும் இடவில்லை என்பதை சுட்டிக் காட்டத்தான்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : தலைவர் அவர்களே, இது சமீபத்தில் நடந்த சம்பவம் அல்ல. அது மட்டுமல்லாமல் இது அவசர பிரேரணைக்கு உரிய ஒரு விஷயமும் அல்ல. அவசர கேள்வி கேட்கலாம். அல்லது கால் அட்டென்ஷன் நோட்டீஸ் 41-வது விதிப்படி கேட்கலாம்; அப்பொழுது என்ன நடந்தது என்பது பற்றி ஸ்டேட்மென்ட் கொடுக்கலாம். ஆனால் இது அவசரப் பிரேரணைக்கு உரியது அல்ல என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

MR. SPEAKER : I withhold consent.

(2) REFUSAL OF MANAGEMENTS OF SOME TEXTILE MILLS TO GIVE BONUS TO THEIR WORKERS.

MR. SPEAKER : I have also received notice of another adjournment motion from Sri M. S. Mani regarding the refusal of the managements of the Hasar Textiles, Pankaja Mills and Kathri Mills and Sudarsan Textiles to give bonus to their workers with a view to wreak vengeance on their workers and the declaring of a lock-out of the mills concerned and thus throwing out of employment 5,000 workers.

திரு. எம். எஸ். மணி : சபாநாயகர் அவர்களே, கோவை மாவட்டத்திலே நான்கு மில்கள் லாக்அவுட் செய்து இருக்கிறார்கள். அந்த நான்கு மில்களிலும் வேலை செய்யும் சுமார் 5,000 தொழிலாளர்கள் இன்றைக்கு வேலையில்லாமல் தவிக்கிறார்கள்.